# Chithambara Nadarajar Aalayan in Thillaikalambagam

**P.V. Susmitha**
*Reg.no 21113154022031, Research Scholar*
*Department of Tamil, S.T.hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr.R.N. Sreekala**
*Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniyam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255978

**Abstract**
*Bhakti is a religious practice that involves loving and feeling one with God. This practice is divided into two levels: Saivism and Vaishnavism. Jesus, a pagan god, is prominent in Saivism The temple itself is unique enough to be called Chidambaram. The Chidambaram Nataraja Temple clarifies the philosophy that the formless God is present in this world like the sky. The place where Chidambaram Nataraja resides and the special features of the place are given priority.*
***Keywords:*** *Thillai City, Thillai Kalambaka, Chidambara Nataraja, Vyakrāpada, Patanjali Sage, Anusuya, Upamanniyar*

**References**
1. Arima Ilangkannan – Thillai Kalambagam – Saradha Publications, G4 Gandhi Adakkagam, Chennai – 14. Edition: 2016.
2. Kumaraguruparar Adigal – Chidambara Mummanik Kovai – Kabir Printing Press, Chennai. Edition: 1952.
3. Kumaraguruparar Adigal – Chidambara Cheyyul Kovai – South India Saiva Siddhanta Publishing Society Ltd., Tirunelveli. Edition: 1941.
4. Nagarcoil Krishnan – Sri Kandapuranam – Narmadha Publications, 10, Naana Street, Thillainagar, Chennai. Edition: 2009.
5. Madi. Srinivasan – Periya Thirumozhi (Naalayira Divya Prabandham), Vol. 1 & 2 – Sri Varahi Printers, Azhwarpet, Chennai. Edition: 2000.
6. Adiyan. Manivasagan – Thirumandiram (Original text with simple commentary) – Saradha Publications, G4 Shanti Adakkagam, Chennai – 14. Edition: 2017.

# தில்லைக்கலம்பகத்தில் சிதம்பர நடராசர் ஆலயம்

***பொ.வி. சுஷ்மிதா***
பதிவு எண்- 21113154022031, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
தமிழ்க் கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் இரா.நி. ஸ்ரீகலா***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலைஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்***
*பக்தியானது இறைவனிடம் அன்பு கொண்டு ஒன்றி உணரும் ஒரு சமய வழிபாட்டு முறையாகும். அவ் வழிபாட்டுமுறை சைவம், வைணவம் என்ற நிலைகளில் பகுக்கப்படுகிறது. உமையொருபாகனான ஈசன் சைவ வழிபாட்டில் முன்னிலைப்படுத்தப்படுகிறார். கோவில் என்றாலே சிதம்பரம் என்று கூறுமளவிற்கு தனித்தன்மை பெற்று காணப்படுகிறது. அரூபமான இறைவன் இவ்வுலகில் முழுவதும் ஆகாயமாக நிறைந்து இருக்கிறார் என்னும் தத்துவத்தை சிதம்பர நடராசர் ஆலயம் தெளிவுப்படுத்துகிறது. சிதம்பர நடராஜர் வீற்றிருக்கும் தலமும், தலத்தின் சிறப்புகளும் முதன்மைப்படுத்தப்படுகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *தில்லை மாநகரம், தில்லைக்கலம்பகம், சிதம்பர நடராஜர், வியாக்கிர பாதர், பதஞ்சலி முனிவர், அனுசுயை, உபமன்னியர்*

**முன்னுரை**

நாட்டியத்திற்கும், பக்திக்கும் புகழ்பெற்ற நகரமாக சிதம்பரம் போற்றப்படுகிறது. சிதம்பரம் என்பது சித்- ஞானம், அம்பரம் - ஆகாயம் என்று 'ஞானாகாசம்" என்னும் பெயரும் 'சிதம்பரம்" என்னும் பெயரிலும் அழைக்கப்படுகிறது. தில்லை எனும் ஊரின் பெயர் காலப்போக்கில் சிதம்பரம் என்று அழைக்கப்படுகிறது. தில்லை மரங்கள் அடர்ந்த வனமாக காணப்படுவதால் 'தில்லைவனம்" என்ற பெயருமுண்டு. தற்போது சிதம்பரத்தில் இம்மரங்கள் அதிகம் காணப்படுவதில்லை. அவ்வூரின் அருகிலுள்ள பிச்சாவரத்தில் காணப்படுகிறது. வியாக்கிரபாதர் இறைவனை மிகுதியாக பற்றியதால் சிதம்பரத்திற்கு 'பெரும்பற்றப்புலியூர்" என்றும் அழைக்கப்படுகிறது. தில்லை, திருச்சிற்றம்பலம், தில்லையம்பலம், ஆலய நகர், நாட்டிய நகரம், புண்டரீக புரம், சிதாகாசத்தலம் என்னும் சிறப்பு பெயரிலும் அழைக்கப்படுகிறது. தில்லையாடியின் திருவடியின் மகிமையை சிதம்பரம் எனும் புண்ணிய பூமி தெளிவுபடுத்துகிறது. சிதம்பர நடராஜர் வீற்றிருக்கும் ஆலயத்தின் மகிமைகளையும் அதன் தனித்துவத்தையும் விளக்கி கூறுவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**தல சிறப்பு**

சிதம்பர நடராஜர் ஆலயம் பஞ்சபூதங்களில் ஆகாயத்தலமாக திகழ்கிறது. பொன்னம்பலநாதர் வீற்றிருக்கும் சிதம்பரம் எனும் புண்ணிய பூமி முக்தி தலங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. பூமியின்

மையத்தில் சிதம்பர ஆலயம் அமைந்திருப்பதால் இருதய ஸ்தானமாக திகழ்கிறது. இதனை உணர்த்துவதற்காக பொன்னம்பலத்தில் இறைவன் மனித உடலின் அமைப்பினை போலவே நடராஜர் இடது புறமாக அமைந்திருக்கிறார். இத்தல மூலவர் திருமூலநாதர், கூத்த பெருமாள், ருத்திரர், பொன்னம்பலநாதர், அம்பலவாணர், ஆடலரசர், நடராசர், தாண்டவமூர்த்தி, சிதம்பரநாதர் எனும் பெயர்களில் அழைப்பதுண்டு. உமையம்மையாள், சிவகாம சுந்தரி என்னும் பெயர்களில் இத்தல இறைவியை வழிபடுகின்றனர். அர்த்தசாம வழிபாடு முடிந்து அனைத்து ஆலயங்களில் உள்ள சிவக்கலைகள் சிதம்பர நடராஜ ஆலய லிங்கத்தில் ஒடுங்குவதால் அனைத்திற்கும் மூலமான லிங்கத்தை 'திருமூலட்டானம்'' என பெயரிட்டு அழைக்கப்படுகிறது. நடராசர் ஆலயத்தில் ஐந்து மன்றங்களான சிற்றம்பலம், பொன்னம்பலம் (சித்சபை), பேரம்பலம் (தேவசபை), நிருத்த சபை, இராச சபை காணப்படுகிறது. இதனை,

**சீர் கொண்ட மன்றமென்றும் திருச்சிற்றம் பலமென்றும்**
**ஏர் கொண்ட பொழிற்றில்லை எழில் பொன்னம் பலமென்றும்**
**வார் கொண்ட முலையுமையாள் வாழ்பேரம் பலமென்றும்**
**போர் கொண்ட கனக சபைப் பெரும்பற்றப் புலியூரோய் (தில்.கலம்: 1)**

எனும் வரிகள் மூலம் அறியலாம்.

### சிதம்பர நடராஜர் ஆலய தலபுராணம்

பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவர் ஆகிய இருவருக்கும் எம்பெருமான் நடனமாடி காண்பித்து நடராசர் என திருநாமம் சூட்டப் பெற்ற வரலாற்றை தில்லையம்பதி உணர்த்துகிறது. வியாக்கிர பாதர் மத்தியந்தன முனிவர் குமாரர் என்னும் திருநாமம் சூட்டப் பெற்ற இவர் அனு தினமும் எம்பெருமானை வழிபடுகிறார். ஈசனை வழிபடுவதற்காக பறிக்கும் மலர்களில் வண்டுகள் எச்சில் படுகிறது. அதனை உணர்ந்து பழுதில்லாமல் மலர்களை பறிக்க தன்னுடைய நகங்களில் கண்களையும் மரங்களின் மீது வழுக்காமல் மேலே சென்று மலர்களை பறிக்க புலிக்காலும் புலிக்கையும் வேண்டி சொக்கநாதரிடம் பெற்றுக் கொண்டார். அந்நிகழ்விற்குப் பிறகு புலி கால் முனிவர் என்னும் பெயருடன் அழைக்கப்பட்டு வருகிறார். வசிஷ்டரின் சகோதரியை மணந்து உபமன்யரை பெற்றார். குழந்தை காம தேனுவின் பாலை உண்டு அதன் சுவையின் மிகுதியால் காமதேனுவின் பாலை வேண்டி அழுதது. யாத்திர பாதர் எம்பெருமானிடம் அழைத்துச் சென்று தற்போது நிலவியுள்ள துன்பத்தை போக்கி அருள வேண்டினார். எம்பெருமான் உபமன்யருக்கு திருப்பாற்கடலினை பருகுமாறு அருளினார். பின்பு வியாக்கிரபாதர் முக்கண்ணரின் திருநடனம் காண வேண்டி சிதம்பரத்தில் சிவபூஜை செய்து வந்தார். பதஞ்சலி முனிவருக்கும் அத்தகைய புண்ணிய பேறும் கிடைக்கப் பெற்றது. பதஞ்சலி முனிவரின் மனைவி அனுசுயை ஆவார்.

பதஞ்சலி முனிவர் ஆதிசேடனின் அவதாரமாக போற்றப்படுகிறார். எம்பெருமான் தருகாவனத்தில் ஆடிய திருநடனத்தை எண்ணிய திருமால் புளகாங்கிதம் அடைந்து உடல் சற்று கனத்தது. திருமாலிடம் ஆதிசேடன் தங்களின் உடல் மாற்றத்திற்கு காரணத்தை வேண்டியபோது, திருமால் ஆதிசேடனிடம் ஈசுவரின் திருநடன தரிசனத்தை எடுத்துரைத்தார். எம்பெருமானின் திருநடனத்தை தானும் காண வேண்டிய ஆவலில் எம்பெருமானை நோக்கி தவம் மேற்கொண்டார். இடவ வாகனன் பதஞ்சலி முனிவரின் முன் தோன்றி வேண்டும் வரத்தை கேட்க வினவிய போது, உங்கள் திரு நடனத்தை காண பெற

வேண்டும் எனும் வரத்தை வேண்டினார். அம்பலவாணரும் ஆதிசேடனின் கோரிக்கையை நிறைவேற்ற அனுசுயையின் குழந்தையாக பிறந்து சிதம்பரத்திற்கு வர வேண்டும். அங்கு முன்னரே நடன தரிசனம் காண வேண்டி வியாக்கிரபாத முனிவர் தவம் மேற் கொண்டிருக்கிறார். உங்கள் இருவருக்கும் தைப்பூச குருவாரத்தோடு கூடிய நன்னாளில் திருநடன தரிசனம் வணங்குவேன் என்று கூறி மறைந்தார். எம்பெருமானின் கூற்றுப்படி ருதுஸ்தானம் செய்து அனுசுயையின் கையில் ஆதிசேடன் விழுந்தார். பாம்பு என்றவுடன் கையை எடுத்த அனுசுயையின் பாதத்தில் ஆதிசேடன் விழுந்ததால் பதஞ்சலி என்னும் பெயர் பெற்றார். சிதம்பர தலத்திற்குச் சென்று பொன்னம்பலநாதரை தரிசித்தார்.

எம்பெருமான் சிதம்பரத்தில் கூத்தப்பிரானாக தோன்றி நடனத்தை நிகழ்த்தினார். பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதர் முனிவரும் நீலகண்டர் நிகழ்த்திய நடனத்தை கண்டு களித்தனர். பதஞ்சலி முனிவருக்காக சிற்றம்பலநாதர் நடனம் ஆடுகிறார் என்பதை,

***ஆடப் பதஞ்சலியார் ஆக்கினார் என் பிறவி***
***சாடப் பதஞ்சலியார் தாம்***
***(சிதம். மும். கோவை: 21)***

என்ற வரிகள் உறுதிப்படுத்துகிறது.

வியாக்கிர பாத முனிவருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் சிதம்பரநாதர் நடனம் காண்பித்த செய்தியை இரட்டைப் புலவர்கள் தில்லைக்கலம்பகத்தில்,

***மன்னொன்று சோதி நடமொன்று தில்லை***
***மணிமன்றின் முன்றி லிடையே***
***பொன்னொன்று மேனி யரவொன்று நீடு***
***புலியொன்று நின்ற வதனால்***
***(தில்.கலம்: 4)***

மேலும்,

***இருவருக்கு நிர்த்தமிடு சிற்ச பைக்குள்***
***இறைபொற் பதத்தை மறவாமல்***
***(தில். கலம்பகம்: 26)***

என்று பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகிறது.

கந்த புராணத்திலும் பதஞ்சலி முனிவருக்கும், வியாக்கிரபாத முனிவருக்கும் எம்பெருமான் சிவ நடனம் காண்பித்த நிகழ்வை,

***பொருவரு தவத்தை யாற்றும் பதஞ்சலி***
***புலிக்கால் அண்ணல்***
***இருவரும் உணர்வால் காண எல்லையில்***
***அருளாலீசன் (கந்.புராணம் :14)***

உற்பத்தி காண்டம் தெளிவுபடுத்துகிறது.

பதஞ்சலி முனிவர் ஆதிசேடனின் அம்சமாக பூமியை தாங்கி நிற்கிறார். எம்பெருமான் இரண்டு கால்களையும் பூமியில் ஊன்றி நின்றால் பூமியின் சுமை அதிகமாகும். அதன் காரணத்தால் நடராசமூர்த்தியிடம் ஒற்றைக் காலை மற்றும் பூமியின் மீது ஊன்றி திரு நடனம் புரிய வேண்டுமென்று வேண்டினார். அதன்படியே கூத்த பெருமானும் அனவரத நடனத்தை நிகழ்த்தினார். இதனை சிதம்பர மும்மணி கோவையில்,

புரம் ஒன்று இரண்டும் புகையழல் உண்ணாப்புவனம் உண்ணும்

***சுரம் ஒன்று இரண்டு மலர்த்தாளும்***
***ஊன்றில் தான் மாமகுடம்***
***பரம் ஒன்றும் என்றுகொல் லோ***
***கொண்டவா அப்பதஞ்சலியே***
***(சிதம்.மும்.கோவை: 4)***

என்ற வரிகள் எடுத்துரைக்கிறது. சிதம்பரத்தில் எம்பெருமான் நிகழ்த்திய அனவரத நடனத்தை (எப்போதும் எக்காலமும் ஆடும் நடனம்) அன்று முதல் சிற்றம்பலத்தில் என்றும் இடையின்றி நிகழும் தாண்டவமாக திகழ்கிறது.

### கோவில் அமைப்பு

தில்லை நடராஜ பெருமாள் ஆலயத்தில் நான்கு ராஜகோபுரங்கள் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் கம்பீரமாக காட்சியளித்து ஒன்பது வாயில்களைக் கொண்டுள்ளது. நான்கு திசைகளிலும் கோபுரங்களைக் கொண்ட தில்லையம்பதியில் பக்தர்களுக்கு தானம்

அளித்து அரசுபுரியும் அம்பலநாதர் என்பதை,

**எல்லைக்கோ புரநான்கும் கொடி**
**முழங்க நிதிவழங்கும் இறைவீர் எங்கள்**
**(தில்.கலம்:96)**

என்ற வரி விளக்குகிறது.

தில்லையம்பதியில் ஒன்பது வாயில்களும் ஒன்பது நவதுவாரங்களை குறிக்கிறது. நான்கு கோபுரங்களை சுற்றி உள்ள மதில்களை 'வீரப்ப நாயக்கர் மதில்'' என்று அழைக்கப் படுகிறது. தெற்கு கோபுரத்தின் வழியாக ஆலயத்திற்குள் செல்ல வேண்டும். கிழக்கு கோபுர வாயிலில் விநாயகரும், முருகரும் காட்சி தருகின்றனர். தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி முக்குருணி விநாயகர் திருச்சன்னதி காணப்படுகிறது. கற்பக விநாயகர் மேற்கு கோபுர வெளிப்புறத்தில் கொலுவிருக்கிறார். மேற்கு கோபுரத்தின் வட திசையில் பாலசுப்பிரமணியர் கிழக்கு முகமாக அருள்பாளிக்கிறார். மதுரை சோமசுந்தர கடவுள் திருச்சன்னதியும், வடக்கே நூற்றுக்கால் மண்டபமும் காணப்படுகிறது. ஒற்றைக்கால் மண்டப விநாயகர் என்னும் 'திருமூல விநாயகர்'' சன்னதி அமைந்துள்ளது. அம்மண்டபத்தின் எதிரில் சிவகங்கை தீர்த்தகுளம் காணப்படுகிறது. ஞான சக்தியான சிவகாம சுந்தரி அம்மாள் அமர்ந்துபக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். அம்பாள் கோவிலில் சந்திரகுப்தர் சன்னதியும் காணப்படுகிறது.

வடக்கு முகமாக துர்க்கை அம்மனும், சற்று வடக்கே சண்முகப் பெருமாள் என்னும் பாண்டிய நாயக்கர் திருச்சன்னதியும் உள்ளது. இப்பெருமான் ஆறுமுகமும், பன்னிரு கரங்களும் கொண்டு, வள்ளி தெய்வானையுடன் அமர்ந்து காட்சி தருகிறார். மூன்றாம் பிரகாரத்தின் வட திசையில் தெற்கு முகமாக சுப்பிரமணியரும், எமதர்மராஜா திருமேனியும், கிழக்கில் நவலிங்க கோவில் சன்னதியும் காணப்படுகிறது. கிழக்கில் ராஜசபை என்று அழைக்கப்படும் ஆயிரங்கால் மண்டபம் காணப்படுகிறது. நடராசமூர்த்தி ஆனந்த தாண்டவம் ஆடிய மண்டபமாக இம்மண்டபம் அறியப்படுகிறது.

இரண்டாம் பிரகாரத்தின் கிழக்கு, மேற்கு ஆகிய திசைகளில் இரு வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளது. (மனித முகம் சிங்க உடலும்) புருஷா மிருகங்கள் இரு புறங்களிலும் காணப்படுகிறது. தெற்கு பிரகாரத்தில் கால சம்ஹார மூர்த்தியின் திருவுருவமும், நிதர்த்தன சபையில் காளியுடன் ஆடிய ஊர்த்துவதாண்டவ மூர்த்தியின் ஆலயமும் காணப்படுகிறது.

**தில்லைமூ வாயிரவர் பூசைபுரி பாதம்**
**தேவகுட னேஇருவர் தேடரிய பாதம்**
**வல்லமா காளியோடு வாதுபுரி பாதம்**
**(தில். கலம்: 18 )**

காளியோடு நடராசர் நடனம் புரிந்த செய்தியை தில்லைக் கலம்பகம் தெளிவுப்படுத்துகிறது. திருமூலரும்,

**காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்**
**கூளியோ டாடிக் குவலயத் தேயாடி**
**(திரு.மந்: 2746)**

எனும் வரிகளில் எடுத்துரைக்கிறார்.

**திருவாலங்காட்டில் காளியுடன் ஆடிய நடனத்தை**
**காளி யாடக் கனலுமிழ் கண்ணுதல்**
**மீளி யாடுதல் பாருமே**
**மீளி யாடல் வியந்தவள் தோற்றெனக்**
**கூளி யாடிக் குளிப்பதும் பாருமே**
**(சித். செய். கோவை:71)**

என்ற வரிகள் மூலம் சிதம்பரச் செய்யுட் கோவை வெளிப்படுத்துகிறது.

தேர்வடிவில் காணப்படும் நிர்த்தன சபையில் நீலகண்டரின் அவதாரமாக திகழும் சரபேஸ்வரர் திருச்சன்னதியை அடுத்து தங்கத்தகடு வேய்ந்த கொடிமரமும் காணப்படுகிறது. இலக்குமிதேவி, தண்டாயுதபாணி ஆகியோரின் திரு உருவமும் வலப்புறத்தில் அமைந்துள்ளது.

திருமுறை காட்டிய விநாயகர், பொல்லா பிள்ளையார் சன்னதியும், மேற்கு பிரகாரத்தில் அருள்பாலிக்கின்றனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் கிழக்கு முகமாக வீற்றிருக்கின்றனர். தட்சணாமூர்த்தி, மல்லிகேசுவரர், வல்லப்ப கணபதி, மோகன கணபதி வடக்கு பிரகாரத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார். அடுத்து சிதம்பரத்தின் தலவிருட்சமான தில்லை மரம் காணப்படுகிறது. சண்டேஸ்வரர் சன்னதியும், கிழக்கே அருணாச்சலேஸ்வரரின் திருமேனியும் காட்சி தருகிறது. தெற்கு திசையில் மூலாட்டானேஸ்வரர், உமையம்மை, வியாக்கிரபாதர், பதஞ்சலி, ஐயப்பன் ஆகியோர் கொலுவிருக்கின்றனர். பேரம்பலத்தில் சட்டநாதர், சனீஸ்வரர், நவக்கிரகங்கள், அர்த்தசாம அழகர் ஆகியோர் சன்னதியும் அமைந்துள்ளது.

அம்பலவாணரும், சிவகாமி சுந்தரியும் ஆனந்த தாண்டவம் ஆடிய சிற்றம்பலம் தங்க ஓடுகளால் காணப்படுகிறது. தங்க தங்க ஓடணிந்த சிற்றம்பலத்தை இரட்டைப் புலவர்கள் தில்லை கலம்பகத்தில்,

***சீரு லாமுறை பாடுசிற் றம்பலம்***
***செம்பொன் அம்பலம் தில்லைச்சிற் றம்பலம்***

***(தில். கலம்: 99)***

என்ற வரிகள் சுட்டிக்காட்டுகிறது.

சித்சபையில் சிதம்பரநாதரை தரிசித்து விட்டால் விநாயகர், இலிங்கோத்பவர், சுப்பிரமணியர் சன்னதியும் காணலாம். பலவகையான சிற்பங்கள் அழகுற இம்மண்டபத்தில் காணப்படுகிறது. அடுத்து தெற்கு முகமாக நடராஜர் சன்னதியும் (சிவனும்), கிழக்கு முகமாக கோவிந்தராஜ சன்னதியும் (திருமால்)கொலுவிருக்கின்றனர். சிவனும் திருமாலும் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது மிகவும் சிறப்பு மிக்கதாகும். இதனை,

***தில்லைக்கோ விந்தர் தொழும் அம்பலவர்***
***திருநாடா செம்பொன் வேண்டேம்***

***(தில்.கலம்: 96)***

என்ற வரிகள் மூலம் அறியலாம். கோவிந்தராசப் பெருமான் வீற்றிருக்கும் மண்டபத்தை 'தெற்றியம்பலம்'' என்று அழைப்பதும் உண்டு. பெருமாள் கிடந்த கோலத்தில் காட்சி தரும் சன்னதி 'திருச்சித்திர கூடம்'' என்று அழைக்கப்படுகிறது. சோலைகள் சூழ்ந்த தில்லையம்பதியின் சித்திரக்கூடத்திற்குள் கோவிந்தராஜ பெருமாள் வீற்றிருக்கிறார் என்பதை,

***தேன்அமர் பூம் பொழில் தில்லைச்***
***சித்திரகூடம் அமர்ந்த***
***வானவர் தங்கள் பிரானை மங்கையர்***
***கோன் மறுவார்***

***(பெரிய திருமொழி: 1177)***

என்று வரிகள் மூலம் திருமங்கையாழ்வார் தெளிவு படுத்துகிறார்.

### இறைவன் காட்சி

தில்லையம்பதி மூன்றாம் பிரகாரத்தின் நூற்றுக்கால் மண்டபத்தின் வடக்கில் கிழக்கு முகமாக நின்று சிவகாமசுந்தரி அம்மாள் காட்சி தருகிறார். சிதம்பரத்தின் உற்சவ மூர்த்தியான அம்பலவாணன் தெற்கு முகமாக எழுந்தருளி தன்னை வணங்கும் அன்பர்களுக்கு அருள் வழங்குகின்றார்.

சிற்றம்பலத்தில் நடனம் புரிந்த கோலத்தில் எம்பெருமானின் திருவடியை கண்டு ரசித்து அன்பர்களுக்கு முத்தி வழங்கியதை,

***இருடிக்கும் பதஞ்சலிக்கும் இடை***
***நடுவே நடனமிடும் இருபா***
***தங்கள் தெரிசிக்க லாமுமக்கும் சேவிக்க***
***லாம்புலியூர்ச் சிவவைத் தானே***

***(தில்.கலம்:80)***

என்று தில்லைக்கலம்பக வரிகள் தெளிவுப் படுத்துகின்றன.

### தலவிருட்சம்

சிதம்பர நடராஜர் ஆலயத்தின் தலவிருட்சமாக தில்லை மரமும், ஆல் மரமும் கொள்ளப்படுகிறது. பிரதானமாக தில்லை மரம் போற்றப்படுகிறது. தில்லை

சிற்றம்பலநாதரின் ராஜகோபுரத்திற்கு அருகே தலவிருட்சமான தில்லை மரம் காணப்படுகிறது.

**தல தீர்த்தம்**

சிதம்பர நடராஜர் திருத்தலத்தின் தல தீர்த்தமாக சிவகங்கை தீர்த்தம் முதன்மைப்படுத்தப்படுகிறது. சிதம்பரத்தில் காணப்படும் சிவகங்கை தீர்த்தமே புனிதமான கருதப்படுகிறது. இதனை,

**வேற்றுநீர் விரிசடையோன் கங்கைநீர்**
**இத்தனைக்கும் மேலாம் கண்டீர்**
**காற்றுநீர் உரிவையர்அம் பலத்தாடும்**
**ஐயர்சிவ கங்கை நீரே (தில்.கலம்:42)**

என்ற வரிகள் மூலம் அறியப்படுகிறது.

இதனையே சிதம்பர செய்யட் கோவையும்,

**தீர்த்தம் என்பது சிவகங்கையே**
**ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே**
**மூர்த்தி யம்பலக் கூத்தனது உருவே**
**(சித்.செய்.கோவை:45)**

என்ற வரிகளும் சுட்டிக்காட்டுகிறது.

மேலும் கூத்தனின் ஆலயத்தில் பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், நாகச்சேரி, பரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல், போன்றவை காணப்படுகிறது.

பரமானந்த கூபம் நடராசர் கோவிலின் கிழக்கில் அமைந்துள்ளது. கோவில் வடகிழக்கு பகுதியில் குய்ய தீர்த்தம் காணப்படுகிறது. புலிமேடு தென்பகுதியில் பாய்கிறது. தில்லையம்பதியின் மேற்கில் வீற்றிருக்கும் இளமையாக்கினார் கோவிலின் எதிரில் வியாக்கிர தீர்த்தம் செல்கிறது. சிதம்பர நடராஜர் ஆலயத்தின் மேற்கில் ஆனந்த தீர்த்தம் காணப்படுகிறது. அனந்தேஸ்வரர் திருத்தலத்தின் மேற்கில் நாகச்சேரி தீர்த்தம் காணப்படுகிறது. வடமேற்கு பிரம்ம தீர்த்தமும், வடக்கே சிவப்பிரியை தீர்த்தமும் பாய்கிறது. தென்கிழக்கில் திருப்பாற்கடல் அமைந்துள்ளது.

**திருவிழா**

சிதம்பர நடராசர் ஆலயத்தில் அர்த்தம வழிபாடு மிகவும் சிறப்பு மிக்கதாகும். அவ்வழிபாட்டில் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் அதிகம் வருகை தருகின்றார்கள். நடராசருக்கு தினமும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. மாபெரும் திருவிழாவாக ஆனி மாதம், ஆனி திருமஞ்சன திருவிழாவும், தேர் திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. மார்கழி ஆருத்ரா தரிசனமும், தேர் திருவிழாவும், மார்கழி மாதத்தில் விமர்சையாக நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரை திருமஞ்சன திருவிழாவும், மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதனை தில்லை கலம்பகத்தில்,

**தேடியும் காணாத திருவுருவை மார்கழித்**
**திருமஞ்ச னத்தில் யார்க்கும்**
**தெரிசிக்க வும்பண்ணி அனவரத நடனமும்**
**சேவிக்க வும்புரிவனே**
**(தில்.கலம்:78)**

என்ற பாடலும்,

**கூர்கழிக்கும் வாளினுக்கும் இலக்கான**
**புண்ணாற்றிக் கொள்வார் போல**
**மார்கழிக்கும் தைக்கும் இருந்து ஆற்றினேன்**
**முன்பனியை மாற்றி னேனே**
**(தில்.கலம்:43)**

என்ற வரிகள் மூலம் சிதம்பரநாதர் ஆலயத்தில் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருவிழாவையையும், தை மாதத்தில் நிகழும் திருவிழாவையையும் தலைவர் மறந்துவிட்டார் என்று தலைவனை பிரிந்து வருந்தும் தலைவி கூறுகிறாள் என்பதை குமரகுருபர அடிகள் தெளிவுபடுத்துகிறார்.

இவ்விரு விழாக்களும் அம்பலநாதரின் ஆலயத்தில் நிகழ்த்தப்படும் முக்கிய திருவிழாவாகும். மார்கழி ஆருத்ரா திருவிழா மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சூரசம்ஹார திருவிழாவும் நிகழ்த்தப்படுகிறது. தைப்பூச திருநாளும் சிதம்பர ஆலயத்தில் சிறப்பாக

கொண்டாடப் படுகிறது. மாதாந்திர திருவிழாக்களும் தில்லை கூத்தனின் ஆலயத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடப்படுகிறது.

**தனி சிறப்பு (சிதம்பர ரகசியம்)**

பொன்னம்பலத்தில் நடராசரின் வலது பக்கத்தில் திரை மூடப்பட்ட சிறுவாயில் காணப்படுகிறது. திரை நீக்கப்பட்ட இடத்தில் இறைவனின் திருவுருவம் ஏதுமில்லாமல் தங்கத்தால் ஆன வில்வத்தளை மாலை கட்டப்பட்டு இருக்கும். அவ்விடத்தில் தூபங்கள் காட்டப்படுகிறது. ஆகாய உருவில் எங்கும் இறைவன் இருக்கிறார் என்பதை சிதம்பர ரகசியமாக கொள்ளப்படுகிறது.

**முடிவுரை**

வியாக்கிரபாத முனிவரால் தில்லை மரத்தடியில் வழிபட்ட மூலட்டானேசுவரர் சன்னதி காணப்படுகிறது. நவகிரகங்களால் வழிபட்ட நவலிங்க கோவில் காணப்படுகிறது. மாணிக்கவாசகர், திருக்கோவையார், சேந்தனார் நாள் முக்தி பெற்ற தலமாக திகழ்கிறது. திருநாளைப் போவார், கணம்புல்ல நாயனார், கூற்றுவ நாயனார் முத்தி பெற்ற தலமாகவும் புகழப்படுகிறது. உமாபதி சிவம் கொடிக்கவி பாடி கொடியேற வைத்த புண்ணிய பூமியாகவும் போற்றப்படுகிறது. திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களை சிதம்பர நடராஜர் தளத்தில் சிவகணங்களாக பெற்றுக் கொண்டதை அறியமுடிகின்றது. இவ்வறாக சிதம்பர நடராசர் ஆலயத்தின் புகழையும், பெருமையும், அவற்றின் தனித்தன்மைகளையும் தில்லைக்கலம்பகம் வழியாக இரட்டைப் புலவர்கள் விளக்கிய செய்திகளை ஆய்வுக் கட்டுரையின் மூலமாக தெளிவுபடுத்தப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. அரிமா இளங்கண்ணன் - தில்லைக் கலம்பகம் சாரதா பதிப்பகம், ஜி4 காந்தி அடுக்ககம். சென்னை -14, பதிப்பு : 2016.
2. குமரகுருபர அடிகள் - சிதம்பர மும்மணிக்கோவை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, பதிப்பு: 1952.
3. குமரகுருபர அடிகள் - சிதம்பர செய்யுட் கோவை,தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, பதிப்பு :1941.
4. நாகர்கோவில் கிருஷ்ணன்-ஸ்ரீ கந்தபுராணம், நர்மதா பதிப்பகம், 10 நானா தெரு தில்லைநகர், சென்னை, பதிப்பு: 2009
5. மதி. சீனிவாசன்-பெரிய திருமொழி. நாலாயிர திவ்ய பிரபந்தம், தொகுதி: பகுதி1மற்றும்2, ஸ்ரீவராகி பிரிண்டர்ஸ், ஆழ்வார்பேட்டை,பதிப்பு- 2000
6. அடியன். மணிவாசகன் - திருமந்திரம் மூலமும் எளிய உரையும், சாரதா பதிப்பகம், ஜி- 4 சாந்திஅடுக்ககம், சென்னை -14, பதிப்பு :2017.